விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

24.08.2020 திங்கட்கிழமை

## புதிய அரசமைப்பு உருவாக்கம்: நிபுணர்கள் குழு நியமிக்க முடிவு

கொழும்பு, ஓக 24

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்க நீதி அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் தினத்தில் அந்தக் குழு நியமிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த முதலாவது அமைச்சரவைக்கூட்டத்தின்போது 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை ரத்துச் செய்து 20 ஆவது அரசமைப்பில்

02

## வாள் வெட்டில் மாணவன் பலி!

### ஏறாவூரில் கொடூரம்

மட்டக்களப்பு, ஓக 24

ஏறாவூர் - செங்கலடி பகுதியில் இடம்பெற்ற குழுக்களுக்குள் இடம்பெற்ற மோதலில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இந்த மோதலில் அதே பகுதியைச் சேர்ந்த 15 வயதான மாணவனே வாள் வெட்டுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழுக்கள் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அதிகரித்து பின்னர் குழு மோதலாக மாறியுள்ள நிலையில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்துள்ள மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ஏறாவூர் வைத்தியசாலை

02

# 19ஆவது திருத்தத்தை நீக்குவது ஜனநாயகத்துக்கு மரண அடி!



## சஜித் அணி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக 24

"அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கும் செயற்பாடானது நாட்டின் ஜனநாயகத்தை மீண்டும் நாசமாக்கும் செயற்பாடாகவே அமையும்."

-இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

02

## வடக்கு அரசியலில் மிகப்பெரும் மாற்றம்

### கூறுகிறார் ஜி.எல். பீரிஸ்



கொழும்பு, ஓக 24

நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலில் வடக்கு மக்கள் அதிகாரத்தை ஒரு கட்சிக்கு மாத்திரம் வழங்காமல் பிரித்து வழங்கியிருப்பதை காணமுடிகின்றது. இதனால் வடக்கில் அரசியலில் மாற்றம்

02

## தயாசிறியின் கருத்து குறித்து சுரேன் ராகவன் கடும் விசனம்



கொழும்பு, ஓக 24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியலில் தான் நியமிக்கப்பட்டமை குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர விசனமடைவது தேவையற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேசியப்பட்டியலில் தெரிவுசெய்யுமாறு தான் யாருக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை எனவும் பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட குழுவே தன்னை தேசியக் பட்டியல் உறுப்பினராக தெரிவு செய்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய பட்டியல் பரிந்துரையில் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸவின் பெயரைப் புறக்கணித்து சுரேன்

02

## தமிழ் அரசு மத்திய குழு வவுனியாவில் கூடுகிறது

யாழ்ப்பாணம், ஓக 24

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி வவுனியா குருமன்காடு பிறின்ஸஸ் ரோஸ் விடுதியில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

02

## காணாமற்போன புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுதான் தீர்வு!

### அதுவும் கட்டாயமல்ல என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஓக 24

காணாமற்போன புலி உறுப்பினர்களை தேடவேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என்றும் வேண்டுமென்றால் இழப்பீடு வழங்குவது குறித்து சிந்திக்கலாம் என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத்தில் 4 ஆயிரம் பேர் காணாமல்போயுள்ளனர். இராணுவத்தில் காணாமற்போனோர் என்பது செல்லுபடியான விடயம். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் காணாமல்போயிருந்தால் அவை செல்லுபடியற்றதாகும். அவர்களைத் தேட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. ஆனால், மனிதாபிமான ரீதியில் காணாமல்போன புலி உறுப்பினர்களின் குடும்

02

## கொரோனாவினால் 12ஆவது உயிரிழப்பு!

கொழும்பு, ஓக 24

இலங்கையில் கொரோனா தொற்றினால் 12ஆவது மரணம் நிகழ்ந்துள்ளது.

தேசிய தொற்றுநோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 47 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை

02



## இம்முறை தப்பிவிட்டார் விக்கி அடுத்த தடவை கவனிப்போம்!

### சரத் வீரசேகர இறுமாப்பு

கொழும்பு, ஓக 24

விக்னேஸ்வரனின் உரை இனவெறியானது. எதிர்காலத்திலும் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றுவார் என நம்புகிறேன். அப்போது கவனித்துக் கொள்வோம் என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு

02

## அமைச்சராகும் பஸில்



கொழும்பு, ஓக 24

பஸில் ராஜபக்ஷவுக்கு மீண்டும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் செல்வதற்கு உள்ள கட்டுப்பாடுகள் 20ஆவது திருத்தம் மூலம் நீக்கப்படும் எனத்

02

## இம்முறை...

சுயநிர்ணய உரிமையுண்டு, தமிழ்தான் இலங்கையின் மூத்தமொழியென விக்னேஸ்வரன் அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சூடு இன்னும் தணியவில்லை.

கோட்டா அரசின் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர நேற்று அது பற்றி கருத்து தெரிவித்தார்.

“விக்னேஸ்வரன் நாடாளுமன்றச் சபாநாயகரை வரவேற்று விக்னேஸ்வரன் உரையாற்றியபோது இனவாதத்தையே பேசினார். அப்போது எழுந்து நின்று எதிர்ப்பு தெரிவிக்க முயன்றேன். எனினும், சபாநாயகரை வரவேற்று ஆற்றப்படும் உரைகளை எதிர்ப்பது நாடாளுமன்றப் பாரம்பரியங்களுக்கு எதிரானது என்பதால் என்னால் எதிர்க்க முடியவில்லை.

விக்னேஸ்வரனின் உரை இனவெறியானது. எதிர்காலத்திலும் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றுவார் என நம்புகிறேன். அப்போது கவனித்துக் கொள்வோம்.

விக்னேஸ்வரனின் பேச்சை ஹன்சார்ட் புத்தகத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று கூறினார்.

## தயாசிறியின்...

ராகவன் தெரிவு செய்யப்பட்டமை கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழுவே தேசிய பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தது.

இதன்போது, 29 தேசியப் பட்டியல் ஆசனங்களில் சுதந்திரக் கட்சியில் இருந்து மூவரின் பெயர்கள் பொதுஜன பெரமுனவிடம் வழங்கப்பட்டிருந்தன. அதில் ஆரம்பத்திலிலேயே ஒருவரது பெயர் பொதுஜன பெரமுனவால் நீக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் பொதுஜன பெரமுனவிற்கு 17 தேசியப் பட்டியல் ஆசனங்களே கிடைத்தன. அதற்கமைய அந்தக்கட்சி சுதந்திரக் கட்சியினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த இருவரில் ஒருவரை மாத்திரமே தெரிவு செய்தது.

அந்த ஒரு தெரிவாக நான் தெரிவு செய்யப்பட்டேன். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச சில சந்தர்ப்பங்களில் இது குறித்த தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் கடந்த 20ஆம் திகதி முதலாவது நாடாளுமன்ற அமர்வு நிறைவடைந்தவுடன் அன்றைய தினம் மாலை சுதந்திரக் கட்சியின் செயற்குழு, மத்தியகுழு மற்றும் அரசியல் குழு என்பன கூடியபோது கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தேசியப் பட்டியல் ஆசனத்தில் சுரேன் ராகவன் தெரிவுசெய்யப்பட்டமை குறித்து அநாவசியமான கருத்துக்களை வெளியிடுவது பிரயோசனமற்றது எனக் கூறியிருந்தார். இவ்வாறு மைத்திரிபால சிறிசேன கூறிய விடயமே எனது நிலைப்பாடாக இருக்கின்றது.

உண்மையில் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் கட்சியின் செயலாளருக்கே காணப்படுகிறது. என்றாலும் பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் சுதந்திரக் கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டதால் இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அந்தக் கட்சியின் உயர்மட்டக் குழுவிற்கே காணப்பட்டது. அதற்கமைய அவர்கள் என்னைத் தெரிவு செய்துள்ளார்கள்.

இந்நிலையில், உத்தியோகபூர்வமாக நடந்து முடிந்த ஒரு விடயம் பற்றி தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துவருவதால் எவ்வித பிரயோசனமும் இல்லை-என்றார்.

## காணாமற்போன...

பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து சிந்திக்கலாம். ஆனால், அது அவர்களது உரிமை ஆகாது.

காணாமல்போனோர் குறித்து தேட அரசு தயார். ஆனால், அவர்கள் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களாக இருப்பின் அவர்களுக்கான இழப்பீடு தொடர்பில் இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டி வரும். சிவில் மக்களாக இருப்பின் இழப்பீடு வழங்கலாம். காணாமல்போனோரில் அதிகமானவர்கள் சிவிலியன்களாக அவர்களுக்கு இழப்பீடு வழங்கலாம். அதுபோன்றே காணாமல்போன இராணுவத்தினர்களுக்காகவும் இழப்பீடு வழங்கப்படும்.

காணாமல்போனதாகக் கூறப்படுவோர் இறந்திருக்கலாம் என்று நாங்கள் எண்ணுகின்றோம். அவர்கள் உயிருடன் இல்லை என்றே கருதுகின்றோம். ஆனால், அதனை உறுதியாகக் கூற முன்னர் கணக்கெடுப்பு ஒன்றைச் செய்ய வேண்டும் என்பதையும் இங்கு கூறி வைக்கின்றேன்.

சில காணாமல்போனோர் எனக் கூறப்படுவோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். எனவே, இது தொடர்பில் பரந்துபட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும். போர் நிறைவுக்கு வந்து தற்போது 11 வருடங்கள் கடந்துவிட்டன. 7 வருடங்களின் பின்னர் சான்றிதழ் வழங்கலாம்-என்றார்.

## வடக்கு...

ஏற்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனால், தமிழ் மக்களின் இந்த மாற்றத்தை நாங்கள் பயன்படுத்திக்கொண்டு அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வடக்குக்கும் கொண்டு செல்வோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டிக்கு நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் எனவும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகத் தங்களுக்கு மாத்திரம்தான் கதைக்க முடியும் என்றும் கடந்த காலங்களில் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் தெரிவித்து வந்தபோதும் இனிமேல் அவ்வாறு கூறமுடியாது.

இம்முறை, தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் அதிகாரத்தை வழங்காமல் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மட்டக்களப்பில் பிள்ளையான், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கும் ஆணை வழங்கியுள்ளார்கள்.

இந்தச் சூழலில் தமிழ் மக்களின் இந்த மாற்றத்தை நாங்கள் பயன்படுத்திக்கொண்டு அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வடக்குக்கும் கொண்டு செல்வோம். அபிவிருத்தித் திட்டங்கள் தெற்குக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல.

இதன்படி, தனது கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு பிரதேசத்துக்கும் கொண்டு செல்ல உள்ளோம். வடக்கும் எமது நாட்டின் ஒரு தொகுதி. அனைவருடனும் இணைந்து செயற்படவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்-என்றார்.

# சித்தாண்டியில் காணாமல் ஆக்கப்பட்ட 100 பேரின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று



மட்டக்களப்பு, ஓக 24

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சித்தாண்டி பிரதேசத்தில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று சித்தாண்டி முருகன் ஆலயத்திற்கு முன்பாக பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் சித்தாண்டி, கிரான், சந்திவெளி, மாவடிவேம்பு, முறக்கொட்டான்சேனை பிரதேசங்களின் மக்கள் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த போது ஓகஸ்ட் 15, 18, 22ஆம் திகதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்டு பின் காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 100க்கும் மேற்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக இன்றைய அனுஷ்டிப்பு இடம்பெற்றது.

முருகன் ஆலயத்தில் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு மௌன அஞ்சலியுடன், வாயில் கறுப்புத் துணி கட்டி உறவுகள் தங்கள் ஆதங்கத்தினையும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான எதிர்பார்ப்பினையும் வெளிப்படுத்தும் வண்ணம் அமைதிவழியில் இந்த அனுஷ்டிப்பை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் மு.முரளிதரன், வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலநாயகி உட்பட பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வாள் வெட்டில்...

யின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழ் அரசு...

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கட்சியின் மூத்த துணைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய குழுப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் ஆராய்தல், பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு மற்றும் எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதையில் முன்நோக்கிச் செல்வதற்கான வழிவகைகளை ஆராய்தல், தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும், பின்னருமான காலங்களில் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் வெளியான கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும், உறுப்பினர்களுக்கும் எதிரான பிரசாரங்களும் செயற்பாடுகளும் பற்றி ஆராய்தல், பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்வதற்கான சுயாதீன குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் ஆராய்தல், தேர்தல் காலத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்தல் போன்றன தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசமைப்பு...

திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதன்போது, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக அமைச்சரவை இணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்ட நிலையில், அதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட 5 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சராகும்...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் 20ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்து இரண்டு மூன்று மாதங்களில் ஜயந்த கோத்தாகொட என்ற அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகி பஸில் ராஜபக்ஷவுக்கு வழிவிடுவார் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 19ஆவது...

“புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்த காரணிகள் தனியாக விவாதிக்கப்படவேண்டிய விடயமாகும். ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பது நாட்டின் ஜனநாயகத்துக்கு விழும் மரண அடியாகவே அமையும்” என்றும் அந்த அறிக்கையில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொரோனாவினால்...

அவர் உயிரிழந்தார் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவத்தகம, வேஉட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் இரணவில சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பெண் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர் எனவும் இருதய நோய் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்றும் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu
24.08.2020 திங்கட்கிழமை
சார்வரி, ஆவணி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# முன்னணியின் அறம்?

கட்சியின் பொறுப்புக்களிலிருந்து வெளியேற்றப்பட்ட வி.மணிவண்ணன், தான் கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை. எனது பதவி நிலைகள் பறிக்கப்பட்டு, எனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கட்சியின் அறமற்ற செயற்பாடாகும். இது இயற்கை நீதிக்கு எதிரானது. எனவே, நான் எந்தவொரு பொறுப்பிலிருந்தும் வெளியேறப்போவதில்லை. நானே அப்பொறுப்புக்களை தொடர்ந்தும் வகிப்பேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தனது வாதத் திறமைகளை காண்பித்துக் கொண்டிருக்கும் போது, மறுபுறமாக நேற்றுவரை அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்த ஒருவரான மணிவண்ணன், கஜேந்திரகுமாரின் தலைமையின் நேர்மையின்மை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். இந்த விவகாரம் தமது கட்சியின் உள் பிரச்னையென்று அண்மையில் கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். இதன் மூலம் இதில் மற்றவர்களின் தலையீடு அவசியமற்ற ஒன்று என்பதையே அவர் வலியுறுத்த முற்பட்டிருந்தார். ஆனால், இது இப்போது அவரது கட்சியின் உள் பிரச்னை மட்டும்தானா அல்லது தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்குள் புரையோடிப்போயுள்ள தனிநபர் சர்வாதிகாரம், உட்கட்சி ஜனநாயகமின்மை போன்ற விவகாரங்கள் தொடர்பானதா?

கட்சியில் முக்கிய பொறுப்புக்களிலிருந்த ஒருவர், அவரது தரப்பு நியாயங்களைக் கூற வாய்ப்பளிக்காமல் வெளியேற்ப்பட்டு இருக்கின்றார். அவர் தற்போது தலைமையின் முடிவை ஏற்க முடியாதென்று கூறுகின்றார். இப்போது பிரச்னை மிகவும் சிக்கலானதாக மாறிவிட்டது. மணிவண்ணனைப் பொறுத்தவரையில் அவர்தான் இப்போதும் கட்சியின் தேசிய அமைப்பாளர். அவர்தான் கட்சியின் பேச்சாளர். இதிலுள்ள சுவாரசியமான விடயம் என்னவென்றால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் ஒரே நேரத்தில் ஒருவரை பொறுப்புக்களிலிருந்து அகற்றுவது தொடர்பிலேயே விவாதிக்கப்படுகின்றது. இந்த நிலையில் கஜேந்திரகுமார் என்ன செய்யப் போகின்றார்? அடுத்த கட்டமாக, மணிவண்ணனை கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதாக கஜேந்திரகுமார் அறிவிக்க வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஓர் உடைவு ஏற்படும்.

பொதுவாகவே தமிழ்த் தேசியப் பரப்பில் ஒரு குறைபாடுண்டு. அதாவது, மற்றவர்களை நோக்கி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் காண்பிக்கும் ஆர்வத்தை, தங்கள் மத்தியில் காணப்படும் குறைபாடுகளில் எவருமே காண்பிப்பதில்லை. இந்தக் குறைபாட்டுடன்தான் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் இன்றும் பயணிக்கின்றன. இதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சின்னத்தின் கீழ் இயங்கிவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விதிவிலக்கல்ல. இது தற்போது வெள்ளிடைமலை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனைத்து கட்சிகளை விடவும், தாம் மட்டுமே கொள்கையில் உறுதியானவர்களென்று கூறுவதில் திருப்தியடையும் ஒருவர். மற்றவர்கள் எல்லோரையும் சந்தேகப்படுவதற்கான தகுதி தனக்கிருப்பதாக நம்பும் ஒருவர். அவ்வாறான ஒருவரின் கட்சியின் நேர்மை தொடர்பிலும், அந்தக் கட்சிக்குள் இருக்கும் எதேச்சதிகாரம் தொடர்பிலும் ஒருவர் பொதுவெளியில் கேள்விகளை முன்வைக்கின்றார். இனியும் இது கட்சியின் உள்பிரச்னையென்று கஜேந்திரகுமார் கூறிக்கொண்டிருக்க முடியுமா?

தென்னிலங்கையில் மிகவும் பலமானதொரு அரசாங்கத்துடன், சிங்கள தேசியவாதம் எழுச்சியடைந்திருக்கின்ற நிலையில், அந்த அரசாங்கத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் தமிழர்களிடம் மீதமிருப்பதைக்கூட பறித்துவிடலாமென்னும் சூழல் காணப்படுகின்றபோது, இவ்வாறான உட் பூசல்களிலும், பதவிப் போட்டிகளிலும் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் நேரத்தை விரயம் செய்துகொண்டிருக்கக் கூடாது. இவ்வாறான விடயங்களை நேர்மையாகக் கையாள வேண்டும். கட்சிகளின் பிரச்னைகள் கட்சிகளுக்குள் இருக்கும் வரையில்தான், அது ஒரு கட்சியின் பிரச்னை. பிரச்னைகள் எப்போது பொதுவெளியில் பேசப்படுகின்றதோ, அப்போதே அது ஒரு பொதுப் பிரச்னை ஆகிவிடுகின்றது. ஒரு கட்சியின் ஜனாநயகப் பண்பு தொடர்பிலும் – அக்கட்சியின் அறம் தொடர்பிலும் பொதுவெளியில் கேள்விகள் முன்வைக்கப்படுகின்றபோது, அதற்கு ஒரு வரியில் – அது எங்களது கட்சியின் பிரச்னையென்று பதில் கூறிவிட முடியுமா?

# திடீர் மின் தடை விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு, ஓக 24

இலங்கை முழுமைக்கும் ஏற்பட்டிருந்த திடீர் மின் துண்டிப்பு தொடர்பில் விசாரணை நடத்த அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்று கையளிக்கப்பட இருக்கும் நிலையில் மினசக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும பதவி விலகத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவின் அறிக்கை இன்று திங்கட்கிழமை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

மின் துண்டிப்புக்கு மின்சக்தி அமைச்சு பொறுப்புக் கூறவேண்டும் என்று உறுதியானால் தாம் எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கருத்து வெளியிட்டுள்ளார்.

“நான் 96 மணித்தியாலங்களே மின்சக்தி அமைச்சராக இருந்துள்ளேன். மின்சக்தி அமைச்சே தவறுக்கு காரணம் என்றால், எதிர்வரும் செவ்வாய்க் கிழமையிலிருந்து மின்சக்தி அமைச்சுக்கு வேறு ஒருவர் அமைச்சராக இருப்பார். இந்த நிகழ்வு இலங்கையில் முதற்தடவையாகப் பதிவாகும் - என்றார்.

# பயிரிடப்படாத நிலங்களில் ராணுவம் விவசாயம் செய்யும்

கொழும்பு, ஓக 24

பயிரிடப்படாத தரிசு வயல் நிலங்களில் இராணுவத்தின் மூலம் நெல் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நெல், நீர்த்தேக்கங்கள், குளங்கள், நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

பயிரிடப்படாத நிலங்கள் இருந்தால் அவற்றில் இராணுவத்தின் மூலம் நெல் பயிரிடப்படும் என தெரிவித்துள்ளார்.

# பனிக்கன்குளம் பகுதியில் கிணற்றில் விழுந்த யானை!

முல்லைத்தீவு, ஓக 24

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணி அளவில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானை ஒன்று கிராமவாசி ஒருவரின் கிணற்றில் விழுந்துள்ளது.

தொடர்ச்சியாக ஊருக்குள் நடமாடித் திரியும் இந்த காட்டு யானை நேற்றும் ஊருக்குள் நடமாடித் திரிந்த சமயம் கிராமவாசி ஒருவரின் கிணற்றில் தவறி விழுந்துள்ளது

கிணற்றில் விழுந்த யானையை வெளியேற்றுவதற்காக உரிய அதிகாரிகளுக்கு மக்களால் தகவல் வழங்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் தொடர்ச்சியாகக் காட்டு யானையின் அச்சுறுத்தலின் மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

# பொறியில் சிக்கி சிறுத்தை உயிரிழப்பு



கொழும்பு, ஓக 24

கம்பளை, தொலுவ பகுதியில் நேற்று மேலும் ஒரு சிறுத்தை பொறியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்று சிறுத்தையை பார்வையிட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

## மாகாண சபைத் தேர்தலில்

# வடக்கு-கிழக்கிலும் களமிறங்கும் மனோ!



**கொழும்பு, ஒக 24**

**எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிடும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கைக்கு மேலதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுமாறு பல அழைப்புக்கள் விடுக்கப்படுகின்றன.

அந்த அழைப்புக்களைப் பரிசீலனை செய்து வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய நேசக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் திகதி குறித்து இன்னமும் அறிவிக்கப்படவில்லை. தேர்தல் நெருங்கும்போது கூட்டணி சம்பந்தமான முடிவுகளை உரிய நேரத்தில் எடுப்போம்.

நாம் வடக்கு, கிழக்கில் போட்டியிடும்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியாக மாத்திரமே போட்டியிடுவோம். ஐக்கிய மக்கள் சக்தியாக ஒருபோதும் வடக்கு, கிழக்கில் போட்டியிடமாட்டோம். வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் எங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொலைபேசி சின்னம் வராது-என்றார்.

"வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரோடு இணைந்து போட்டியிடுவீர்களா?" என மனோ கணேசனிடம் வினவிய போது, "தமிழ் தேசியக் கூட் டமைப்பும் எங்களுடைய நேசக் கட்சிதான். அதுபோல் பலநேசக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் காணப்படுகின்றன. அவர்களோடு கலந்தாலோசித்து பயணிப்போம்" - என்று பதிலளித்தார்.

# சாட்டி கடற்கரைப் பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் செயற்திட்டம்



சாட்டி கடற்கரை பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மற்றும் யாழ் ரவுண்ட் ரேபிள் அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் யாழ்ப்பாண றோட்டறி கழகத்தினரும் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது .

ரவுண்ட் ரேபிள் ஸ்ரீலங்கன் அமைப்பானது அண்மைக் காலங்களில் இலங்கையின் பல மாவட்டங்களில் உள்ள கடற்கரைப் பிரதேசங்களை தூய்மைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. நேற்றைய நிகழ்வில் பெருமளவான பிளாஸ்ரிக், மற்றும் பொலித்தீன் உட்பட பல்வேறு சூழலுக்கு மாசு ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் மீட்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன.

# வடக்கு ஆளுநராகப் படை அதிகாரியா? மீள்பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

*கிளிநொச்சி, ஒக 24*

வடக்கு மாகாண ஆளுநராக இராணுவ அதிகாரியை நியமிப்பதை மீள் பரிசீலனை செய்யுங்கள் என ஜனாதிபதி பிரதமரிடம் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவாளர் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன்,

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளதாகவும், அவர் கடந்த காலங்களில் வவுனியா இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரியாகச் செயற்பட்டு வந்தவர் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வடக்கு மாகாணத்துக்கான ஆளுநராக இராணுவ அதிகாரி ஒருவரை நியமிப்பது தொடர்பில் மீள் பரிசீலணை செய்யவேண்டும் என நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டத்தில் நாம் பரிந்துரைப்பதாக தீர்மானம் எடுத்துள்ளோம். இந்தத் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் ரெஜினோல்ட் குரே போன்றோர் சிறப்பாகச் செயற்பட்டார்கள். அதேபோன்று சிவிலியன் ஒருவரை நியமிப்பதே பொருத்தமானது. பொதுஜன பெரமுன கட்சியில் அமைச்சர்களாக ஆளுமை மிக்க பலர் இருந்தார்கள். அவர்களை நாம் இன்னார் என்று அடையாளம் காட்டவில்லை. அவர்களில் சிறந்த ஒருவரை ஆளுநராக நியமிப்பது பொருத்தமானது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துரோகத்தனங்களால் பல இளைஞர் யுவதிகள் வேலை இல்லாது உள்ளனர். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டும். 25 வயதுடையவர்களாக இருந்த இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இன்று 40 வயது கடந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும் -என்றார்.

# மஞ்சள் இறக்குமதி தடை பந்துல குணவர்தன கருத்து

*கொழும்பு, ஒக 24*

மஞ்சள் இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி தேவைக்காக மஞ்சளை இறக்குமதி செய்யும் உள்நாட்டு வர்த்தக ஏற்றுமதியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மஞ்சள் இறக்குமதிக்காக அரசு பிறப்பித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக பிரச்னைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அது தொடர்பில் தமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ஆவா குழுவினர் என அறுவர் ஹெரோயினுடன் சிக்கினர்!



*யாழ்ப்பாணம், ஒக 24*

ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 60 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆவா குழுவைச் சேர்ந்த சந்தேக நபர்கள் என்ற குற்றச்சாட்டில் 6 பேர் பொலிஸாரினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 60 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


## மரண அறிவித்தல்



**அமரர்**

**மாவடி கந்தசுவாமி கௌரியம்மா**

**தோற்றம்**
**1940.03.17**

**மறைவு**
**2020.08.22**

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு அறுகம்பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட மாவடி கந்தசுவாமி கௌியம்மா கடந்த (22.08.2020) சனிக்கிழமை விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களில் கலந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாவடி கந்தசுவாமியின் அன்பு மனைவியும் அமரர்களான கந்தையா – அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், வசந்தகுமார், வசந்தசீலன், வசந்தசுதன், வசந்தரூபன், ரதி, கனி ஆகியோரின் அன்புத் தாயும் சிவராகினி, நிர்மலா, ஜெயகலா, பவானி, அம்பிகைபாகன், திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரூபினி, ஜனாகரன், பிரவீன், வர்ஷா, வினயா, கோகுலன், ராகுலன், அபிகுலன், கௌசிகன், கேசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2020) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி தெற்கு, கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*அளவெட்டி தெற்கு.*

# கட்சி பேதங்களைக் கடந்து எமக்காக குரல் கொடுங்கள்!

## காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, ஓக 24

**எதிர்வரும் ஓகஸ்ட் 30ஆம் திகதி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை, வடக்கு - கிழக்கில் அனுஷ்டிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக வவுனியா மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி சண்முகம் சரோஜினி தெரிவித்தார். வவுனியாவில் தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஆரம்பமாகும் பேரணி, யாழ். மாவட்ட செயலகம் வரை சென்று, அங்கு ஐ.நாவுக்குக் கையளிப்பதற்கான மகஜரை வழங்கவுள்ளோம்.

அதேபோன்று கிழக்கிலும் கல்லடிப் பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரை சென்று அங்கும் மகஜரொன்று கையளிக்கவுள்ளோம்.

எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் முடிவடைந்து விட்டது. இருந்தும் எமது பிள்ளைகளுக்கான முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. இந்நிலையில் கட்சி பேதமின்றி எமது உறவுகளை கேட்டு நிற்கும் எமக்காக குரல் கொடுங்கள்-என்றார்.

# கேப்பாபுலவில் உள்ள 18 பேருக்குத் தொற்று!



முல்லைத்தீவு, ஓக 24

முல்லைத்தீவு - கேப்பாபுலவு விமானப்படைத்தள தனிமைப் படுத்தல் நிலையத்தில் தனிமைப் படுத்தப்பட்டு வந்தவர்களில் 18 பேருக்கு கொரொனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த 257 பேர் கடந்த 09ஆம் திகதி கேப்பாபுலவு விமானப் படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின்போது 21ஆம் திகதி 6 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர்கள் கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு தொகுதி பேருக்கு தெற்கின் முல்லேரியாவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையின்போது, 12 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# எந்தக் கொம்பன் வந்தாலும் எம்மை அசைக்க முடியாது

## இராதாகிருஷ்ணன் கூறுகின்றார்



ஹற்றன், ஓக 24

"எந்தக் கொம்பன் வந்தாலும் மலையக மக்களின் மாபெரும் அரசியல் இயக்கமான தமிழ் முற்போக்கு கூட்டணியை அழிக்கவே முடியாது." என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று மதியம் ஹற்றன் நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியாகவே நாம் போட்டியிட்டோம். அதில் வெற்றிபெற்று ஐந்து ஆண்டுகளாக எமது மக்களுக்கு பல சேவைகளை முன்னெடுத்தோம். அவற்றை முன்னிலைப் படுத்தியே பிரச்சாரம் செய்தோம். எமது சேவையை அங்கீகரித்திருப்பதாலேயே இரண்டாவது முறையும் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களை மக்கள் வெற்றிபெற வைத்துள்ளனர்.

கொழும்பிலும், கண்டியிலும், பதுளையிலும், நுவரெலியாவிலும் வாக்குகளை சிதறடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் தமிழ் முற்போக்கு கூட்டணி நூறுவீத வெற்றியை பெற்றுள்ளது. எம்.பியாக இருந்த எவரும் தோல்வியடையவில்லை. எனவே, எமது மக்களை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதிக்கு உரிய வகையில் சேவைகள் தொடரும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியாக பயணித்து எமது மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்போம். எந்த கொம்பன் வந்தாலும் தமிழ் முற்போக்கு கூட்டணியை அசைக்கமுடியாது- என்றார்.

# 376 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 376 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா மற்றும் கட்டாரில் இருந்து 376 இலங்கையர்கள் நேற்று அதிகாலை தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்களில் அவுஸ்திரேலியாவில் இருந்து 239 பேர் மத்தள விமான நிலையம் ஊடாக இலங்கை வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 35 பேரும், கென்யாவில் இருந்து 83 பேரும் மற்றும் கட்டாரில் இருந்து 19 இலங்கையர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவருக்கும பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அனைத்து இன, மதங்களை நாம் சமமாக கருதுகிறோம்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்





கொழும்பு, ஓக 24

அனைத்து இனங்கள் மற்றும் மதங்களைச் சமமாகக் கருதுவதுடன், பௌத்த மதத்துக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள இடத்தைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண மஹாசங்க கூட்டத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பிரதமர், மஹாசங்கத்தின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளுக்கு மத்தியிலேயே அரசு செயற்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், குருநாகல் மாவட்ட வேட்பாளராக களமிறங்கிய தனக்கு கடந்த பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு குருநாகல் மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளிலுமுள்ள மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் செய்த அர்ப்பணிப்புக்கு இதன்போது பிரதமர் நன்றி தெரிவித்தார்.

அதேபோன்று, நாட்டின் எதிர்காலத் திட்டங்களை மஹாசங்கத்தின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் செயற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாகக் கூறியுள்ளார் எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

அனைத்து இனங்களையும் மதங்களையும் சமமாக நடத்துவதிலும், அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தைப் பாதுகாப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் மஹிந்த குறிப்பிட்டார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராகவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் வடமேல் மாகாணத்தின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு, உள்ளூர் அரசாங்க பிரதிநிதிகளைத் தொடர்புகொண்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செய்திகள்

# பிரபாகரனின் பெரியப்பாவாக முயற்சிக்கிறார் விக்னேஸ்வரன்

## கொதிக்கிறார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, ஒக 24

**பிரபாகரனின் பெரிய தந்தையாவதற்கே விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையின் பூர்வீக மொழி சிங்களம் அல்ல தமிழ் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்த உரையால் நாம் குழப்பம் அடையவில்லை. ஏனெனில் விக்னேஸ்வரனின் பிள்ளைகளுக்கே தமிழ் மொழி தெரியாது.

குழப்பத்தை ஏற்படுத்து வதற்காகவே இவ்வாறு இனவாதக் கோணத்தில் கருத்துகளை வெளியிட்டு வருகிறார்." என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 25,26 ஆம் திகதிகளில் செயலமர்வு

கொழும்பு, ஒக 24

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்காக இரண்டு நாள் செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாளையும் நாளை மறுதினமும் இந்தச் செயலமர்வு நடத்தப்படும் என் நாடாளுமன்றப் பொதுச்செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பட்டறையில் பங்கேற்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார். அத்துடன் சபாநாயகர் மஹிந்த யாப்ப அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் செயலமர்வை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நாடாளுமன்றச் செயலகம் முன்னெடுத்துள்ளது. இரு நாள்களும் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நாடாளுமன்றத்தின் குழு அறை ஒன்றில் இச்செயலமர்வு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்கிஸை கடலில் நீராடச் சென்ற இளைஞர்களை காணவில்லை

கொழும்பு, ஒக 24

கல்கிஸைக் கடலில் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்கள் காணாமற்போயுள்ளனர்.

நுவரெலியா பூண்டுலோயா பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இரண்டு இளைஞர்களே காணாமல் போயுள்ளனர்.

நேற்று மாலை இந்தச் சம்பவம் நடந்தது.

அவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மும்முரம்

கொழும்பு, ஒக 24

2020ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து தற்போது கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவு தொடர்பில் கிராம உத்தியோகத்தரின் ஊடாக வாக்காளர்களின் விவரம் பெறப்பட உள்ளது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் 2019ம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு அமைவாகவே நடைபெற்றிருந்தது.

அதற்கமைவாக இலங்கையில் ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹற்றனை அதிர வைத்த கூட்டணியின் வரவேற்பு







கொழும்பு, ஒக 24

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று மதியம் ஹற்றன் நகரில் நடைபெற்றது.

ஹற்றன் மல்லியப்புச் சந்தியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஹற்றன் நகர பிரதான வீதியின் வழியாக மணிக்கூட்டுச் சந்தியை வந்தடைந்து அங்கு பொது கூட்டம் இடம்பெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொது மக்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து வரவேற்றனர்.

# 19ஆவது திருத்தத்தின் பாதகமான அம்சங்கள் நீக்கப்பட வேண்டும்!

## அமைச்சர் ஜனக வக்கும்புர சுட்டிக்காட்டு

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் எதிர்மறையான அம்சங்களை நீக்குவது மிக முக்கியமானது என்று இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர், சரியான முறையில் செயல்படாத சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுத்தப்படவேண்டும் என்றார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளிட்ட தேர்தல் முறையில் மாற்றம் செய்வது குறித்தும் கவலைகள் நீடிக்கின்றன. ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படுவது ஜனநாயக உரிமை என்றும், ஜனாதிபதிக்கு அத்தகைய அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

பாராளுமன்றத்தின் மேலாதிக்கம் ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள மக்களிடம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நேர்மறையான அம்சங்களை அறிமுகப்படுத்தும் போது 19 ஆவது திருத்தத்தின் எதிர்மறைகளை ஒழிக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் மகோற்சவம் இன்று காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக 24

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா நடைபெறும்.

5 ஆம் திருவிழாவாகிய 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முத்துச் சப்பறமும் நடைபெறும்.

செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 9.00 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். அன்று நள்ளிரவு 12.00 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறும். மறுநாள் வியாழக்கிழமை திருவடிநிலை புனித தீர்த்தக் கடலில் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மேற்படி நேரங்களில் மாற்றம் இடம்பெறும் எனவும் அடியார்கள் சுகாதார



நடைமுறைகளைப் பின்பற்றி சைவ சமய விழுமியங்களுக்கு அமைவாக செயற்படுமாறு ஆலய பரிபாலன சபை கேட்டுக்கொண்டுள்ளது.

பக்தர்களின் நலன் கருதி காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ்கள் ஆலய வீதியூடாக பயணம் செய்யும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செய்திகள் |

# பட்டதாரிகளின் நியமனத்தை தாமதமாக்குவதற்கு முயற்சி!

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக 24

**அமைச்சரவை ஒப்புதல் வழங்கியபோதிலும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதை தாமதப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குவதை அரசு தாமதப் படுத்துகிறது என்று சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தென்னே ஞானானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவிக்கும் என்றும் தேரர் சுட்டிக்காட்டினார்.

# டிராக்டர் சில்லுக்குள் சிக்குண்ட குடும்பத்தலைவர் நசிந்து சாவு!

## சங்கானையில் நேற்று பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக 24

மணலுடன் சென்ற டிராக்டர் மக்காட் பகுதியில் இருந்து பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் தவறி வீழ்ந்து சில்லுக்குள் நசிந்து உயிரிழந்தார்.

சங்கானை விழிசிட்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உதயகுமார் சுரேஷ்குமார் (வயது-32) என்பவரே உயிரிழந்தார்.

மணல் ஏற்றி வந்த டிராக்டர் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி மின் கம்பத்துடன் மோதியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கசிப்பு உற்பத்தி மையத்தை முற்றுகையிட்ட இளைஞர்கள்

## வட்டக்கச்சியில் நேற்று அதிரடி





கிளிநொச்சி, ஓக 24

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு எதிராக வட்டக்கச்சி இளைஞர்கள் களத்தில் குதித்துள்ளனர். 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், எதிர்காலச் சமுதாயத்தை வளமாக்கும் நோக்குடனும் போதைப்பொருளற்ற பிரதேசமாக அடையாளப்படுத்தும் தூர நோக்குச் சிந்தனையுடன் களமிறங்கியுள்ளனர்.

நேற்றுக் காலை வட்டக்கச்சி 10 ஆம் வீட்டுத்திட்டம் பகுதியில் இந்த இளைஞர்களால் பெருமளவு கசிப்பு உற்பத்தி அழித்தொழிக்கப்பட்டது, இந்த இளைஞர்களின் செயற்பாட்டை பிரதேச மக்கள் பாராட்டி வருகின்றனர்.

அண்மை நாட்களாக வட்டக்கச்சிப் பிரதேசத்தை சேர்ந்த 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் இவ்வாறு போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் சுயமாக களமிறங்கியுள்ளனர்.

பொலிஸார், இராணுவ புலனாய்வுப் பிரிவு, விமானப்படையினரின் ஆதரவுடன் போதைப் பொருளற்ற வட்டக்கச்சி எனும் தொனிப்பொருளில் இந்த சமூக வேலைத்திட்டத்தில் அவர்கள் களமிறங்கியுள்ளமை பிரதேசத்தில் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மது உற்பத்தி செய்யப்படும் பகுதிகளை முற்றுகையிடுதல் பொலிஸாரிடம் பாரமளித்தல், விற்பனை செய்யப்படும் பகுதிகளுக்கு கொள்வனவுக்காக வரும் மக்களை தடுத்தல் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறுகிய கால வேலைத்திட்டத்தில் கணிசமான அளவு சட்டவிரோத கசிப்பு விற்பனை தடுக்கப்பட்டுள்ளதாக இந்த சமூகப் பணியில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வேலைத்திட்டத்தின் ஒன்றான கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் வகையில் இளைஞர்கள் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டு 420 லீற்றர் கோடா மற்றும் 10 லீற்றர் கசிப்பு ஆகியன மீட்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த இளைஞர்களின் செயற்பாட்டில் தொடர்ந்தும் மேலும் பல இளைஞர்கள் இணைந்து வருவதாகவும், பெண்கள் குறிப்பாக குடும்பப் பெண்கள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் சமூக வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

போதைப்பொருளற்ற வட்டக்கச்சி மண்ணை உருவாக்கும் செயற்திட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்குப் பிரதேசத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

## காணாமற்போனோர் பணியகத்தின்

# தலைவர் பதவியிலிருந்து விலகினார் சாலிய பீரிஸ்!

கொழும்பு, ஓக 24

காணாமற்போனோருக்கான பணியகத்தின் தலைவர் பதவியில் இருந்து, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் விலகியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தாம், பதவி விலகியுள்ளதாக சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னைய அரசால், நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளின் ஒரு அங்கமாக, 2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காணாமற்போனோருக்கான பணியகத்தின் முதல் தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்குப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ள சாலிய பீரிஸ், அதற்கான பிரசாரங்களில் ஈடுபடுவதற்கு வசதியாகவே



காணாமற்போனோருக்கான பணியகத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# கஞ்சாவுடன் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஓக 24

பாரவூர்தி ஒன்றில் பூக்கன்றுகளை விற்பனை செய்யும் வேளையில் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பாணந்துறை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் இவ்வாறு போதைப்பொருள் விற்பனை செய்தனர் எனக் கூறப்படுகிறது.

சந்தே நபர்கள் மேலதிக வகுப்புகளுக்காக செல்லும் மாணவர்களிடமும் போதைப்பொருள் விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

# ட்ரோனுடன் சீனர் கைது



கொழும்பு, ஓக 24

கொழும்பு- கொள்ளுபிட்டிப் பகுதியில் சீனப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் ட்ரோன் கெமராவொன்றை இயக்கிய குற்றச்சாட்டில் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

# தம்பதியருக்கு வாள்வெட்டு!

தென்மராட்சி- மறவன்புலவில் நேற்று முன் தினம் மாலை வாள்வெட்டுக்கு இலக்காகிக் கணவனும் மனைவியும் படுகாயமடைந்துள்ளனர்.

தமது வீட்டுக்கு முன்பாக மதுபோதையில் சத்தமிட்டுக் கொண்டிருந்த இளைஞர்களை அங்கிருந்து செல்லுமாறு இவர்கள் கூறியுள்ளனர்.

இதையடுத்து, நேற்று முன் தினம் மாலை 5.15 மணியளவில் 4 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர், வீட்டுக்குள் நுழைந்து கணவனையும் மனைவியையும் வாளால் வெட்டியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த இருவரும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

# துப்பாக்கிகள், ரவைகள் மீட்பு நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக 24

அம்பாந்தோட்டைப் பகுதியில் வீடொன்றில் இருந்து துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய



மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கை களின்போதே இந்தத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதிகாரத்தில் வீணற்ற குழப்பம்

## முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தவராசா சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக 24

**மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் செயற்பாடுகள் வரையறைகள், அதிகார எல்லைகள் தொடர்பாக பல குழப்பமான கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.**

**குறிப்பாக, அரச அதிகாரிகள் மட்டத்தில் கூட இது தொடர்பாக சில தெளிவற்ற கருத்துக்கள் நிலவுவதாக அறியக் கிடைக்கின்றது என வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பது ஒரு மாவட்டத்தின் நிறைவேற்று செயற்பாடுகளை, குறிப்பாக அபிவிருத்தித் திட்டங்களை, ஒன்றிணைப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான ஒரு நிர்வாக ரீதியான ஏற்பாடாகும். இந்தக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுநிர்வாக, ஜனாதிபதி செயலகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு போன்றவற்றின் சுற்றிக்கைகளே வழிகாட்டியாக அமைகின்றது.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்க வேண்டுமென வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றனவே தவிர இணைத் தலைரோ, அல்லது மாவட்ட செயலாளரோ தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ அதிகாரமளிக்கப்பட்டவர்களாக அச் சுற்றிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

மேலும் ஓர் அமைச்சர் / அமைச்சுக்கு அரசமைப்பு ரீதியாகவும் சட்ட ஏற்பாடுகளினூடாகவும் வழங்கப் பட்டுள்ள அதிகார எல்லையை மீறியும் மாவட்ட ஒருங் கிணைப்பு குழு முடிவுகளை எடுக்க முடியாது. ஓர் அமைச் சரின் தத்துவங்கள் அரசமைப்பின் பிரிவு 42, 43 இல் விதந் துரைக்கப்பட்டவைக்கு அமைவாக அமைகின்றது.

ஓர் அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய தனது பொறுப்பிலுள்ள அரச திணைக்களங்கள் அல்லது வேறு நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென் பது அரசியல் அமைப்பின் பிரிவு 52(2) இல் அமைச் சருக்கு வழங்கியுள்ள தத்துவம். அதேபோல், ஓர் அமைச் சிற்கு உரிய விடயப்பரப்புகள் அந்தந்த அமைச்சுக்குரிய சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அத்துடன் ஜனாதிபதியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட 19.08.2020 திகதிய மாவட்ட செயலாளர்களுக்கான கடிதத்தில் மாண்புமிகு ஜனாதிபதி ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஒருங்கிணைப்புக்குழுவிற்கு அம் மாகாணத்தின் ஆளுநரையும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் இணைத்தலைவர்களாக நியமித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தொடர்பாக சுற்றறிக்கைகள் காலத்துக்கு காலம் சில சில மாற்றங்களுடன் வெளிவந்துள்ளன.

இவற்றில், விடயங்களை தெளிவுபடுத்தும் முக்கியத்துவம் கொண்டவையாக 24.10.1996 ஆம் திகதிய பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 23.03.2016 ஆம் திகதிய ஜனாதிபதி அலுவலகச் சுற்றிக்கை, 22.05.2017 திகதிய உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 13.02.2019 மற்றும் 27.06.2019 ஆம் திகதிய உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு ஆகியவற்றின் சுற்றிக்கைகள் குறிப்பிடத்தக்கவை.

இச்சுற்றிக்கைகளில் இருந்து மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வருவன காணக்கூடியதாக இருக்கின்றது.

1. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மாவட்ட மட்டத்தில் காணப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் பிரதான குழுவாகும்.

2. மாவட்ட செயலாளர் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாவட்ட இணைப்புக்குழுக்களில் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டின் படி செயற்படுத்தப்பட வேண்டும்

3. மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்காக செற் படும் போது அரச சுற்றறிக்கைகள் போன்றவற்றிலுள்ள சட்டபூர்வ ஏற்பாடுகள் காரணமாக ஏதாவது தடையோ, சிக்கல் நிலையோ ஏற்படுமானால் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக புதிய முன்மொழிவுகளை முறைப்படி உரிய அலுவலர்களுக்கு (நிரல் அமைச்சுக் கள் / திணைக்களங்கள் / அரச திணைக்களங்கள் / அரச நிறுவனங்கள்) அனுப்ப வேண்டியது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாகும்.

4. மாவட்ட இணைப்புக்குழுவால் எடுக்கப்பட்ட சில முடிவுகள் விடயம் சார்ந்த அமைச்சின் நடவடிக்கைகளை பாதிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் அக்குழு முடிவை செயற்படுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட விடயம் சார்ந்த அமைச்சினதும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினதும், உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அந்தவகையில் தற்போது ஒருங்கிணைப்பு குழு தலைமை தொடர்பில் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உயர் அதிகாரிகளுக்கு, ஏற்பட்டுள்ள குழப்பநிலையை அதற்கென வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை சரிவர புரிந்துகொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்ள வேண்டும் என்பதே இத்தெளிவுபடுத்தலின் நோக்கமாகும் - என்றுள்ளது.

# வீதியால் சென்ற யுவதியிடம் படைச் சிப்பாய் அநாகரிகம்

## தேராவில் பகுதியில் பதற்றம்



முல்லைத்தீவு, ஒக 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் வீதியால் சென்ற யுவதியிடம் இராணுவச் சிப்பாய் ஒருவர் அநாகரிகமாக நடக்க முற்பட்டதையடுத்து தேராவில் இராணுவ முகாம் பகுதியில் பொதுமக்கள் திரண்டதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தேராவில் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதி யில் அமைந்திருக்கின்ற இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள வீதியால் அந்த யுவதி பயணித்துக் கொண்டிருந்த வேளையில் அந்தப் பெண்ணை அழைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் அநாகரிகமாக நடந்துள்ளார்.

இந்த விடயத்தை யுவதி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் அனைவரும் இராணுவ முகாமுக்கு முன்பாக ஒன்று கூடியதை அடுத்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியுமாறு சம்பவ இடத்திற்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில் அந்த யுவதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீ பரவலில் 40 ஏக்கர் பாதிப்பு!



கொழும்பு, ஒக 24

மொனராகலை-கும்புக்கன்ன வனப் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீ பரவலில் சுமார் 40 ஏக்கர் நிலம் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை ஏற்பட்ட இந்த தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

# அடுத்த மாத இறுதிக்குள் விமான நிலையம் திறப்பு



கொழும்பு, ஒக 24

"கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் மீளத் திறக்க அரசு எதிர்பார்த்துள்ளது."

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமையவே இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அழைப்பதற்கான ஏற்பாடுகளின்போது நாட்டு மக்களின் பாதுகாப்பு கருத்தில்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையின் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தவறுகள் தொடர்பில் ஆராய்வதே எனக்குள்ள மிகப் பெரிய சவால்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி கூறுகிறார்



கொழும்பு, ஒக 24

கிரிக்கட் சங்கங்கள் மற்றும் வீரர்களுடன் இணைந்து இலங்கையின் விளையாடுக்களில் எந்த இடத்தில் தவறுகள் இடம்பெற்றுள்ளன என்பது தொடர்பில் ஆராய்வதே ஒரு விளையாட்டு அமைச்சராக தனக்குள்ள மிகப்பெரிய சவால் என விளையாட் டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன் உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
**காலை**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
விஜய் சேதுபதி மற்றும் மடோனா நடிப்பில் காதலும் கடந்து போகும்




விஷ்ணு மற்றும் ரம்யா நம்பீசன் நடிப்பில் குள்ளநரிக் கூட்டம் திரைப்படக் காட்சிகள்




4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து
**இரவு**
7.00 மணி : சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் யோகிபாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைடம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
**இரவு**
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 - தமிழ்
6.00 மணி - தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 - கணிதம்
7.30 மணி - தரம் 09 - தமிழ்
8.15 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
**இரவு**
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 சிவாய மந்திரம்
6.00 சுப்ரபாதம்
07.00 இன்றைய சிந்தனை
07.05 இன்றைய நாள்
07.20 சின்மய சிந்தனை
07.30 மங்கள இசை
08.00 அருளுரை
08.30 திருவாசகம்
09.00 திருவிழா - 01
10.00 புதியதோர் தொடக்கம்
10.30 பஜனை
11.00 பக்திமலர்
**பகல்**
12.00 திரையில் பக்தி
12.30 திருவிழா - 02
6.00 கந்தசஷ்டி கவசம்
7.00 அருளுரை
7.30 திருவாசகம்
08.00 திருவிழா - 01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி நேரலை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2020 அன்று வெளியிடப்பட்டது.